கன்னியாகுமரி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு
(இ) நாகர்கோவில்
மாவட்ட நீதிமன்ற வளாகம், நாகர்கோவில்

அனுமதி ஆணை எண் -107/2025, நாள்: 26.09.2025

சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களாக பணியாற்ற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

கன்னியாகுமரி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு (இ) நாகர்கோவில், பத்மனாபபுரம், குழித்துறை, இரணியல் மற்றும் பூதப்பாண்டி ஆகிய இடங்களில் இயங்கும் வட்ட சட்டப் பணிகள் குழுவிற்கு சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்களாக பணியாற்ற கீழே குறிப்பிட்ட நபர்கள் விண்ணப்பிக்கலாம்.

- ஆசிரியர்கள் (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் உள்பட)
- ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள்
- சமூகப் பணியில் முதுநிலைக் கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்
- அங்கன்வாடி பணியாளர்கள்
- மருத்துவர்கள் / உடல்நல நிபுணர்கள்
- மாணவர்கள் மற்றும் சட்டக் கல்லூரி மாணவர்கள் (அவர்கள் வழக்கறிஞராகப் பதிவு செய்யும் வரை)
- அரசியல் சார்பற்ற அரசு சாரா சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் சங்கப் பிரமுகர்கள்
- மகளிர் குழுக்கள், மைத்ரி சங்கங்கள் மற்றும் வறியோரை உள்ளடங்கிய சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள்
- நீண்ட கால தண்டனை பெற்று சிறையில் உள்ள படித்த சிறைவாசிகள்
- மாவட்ட / வட்ட சட்டப்பணிகள் தன்னார்வ சட்டப் பணியாளர்கள் பணிக்கு பொருத்தமாக கருதும் நபர்கள்.

1	**கல்வி தகுதி**	பள்ளி இறுதி வகுப்பில் (10ம் வகுப்பு) தேர்ச்சி பெற்றவராகவும், விரைவாகப் புரிந்துணரும் திறன் உடையவராகவும் இருத்தல் வேண்டும்
2	**இதர தகுதிகள்**	சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் இரக்கம், ஏனையவரின் உணர்வுகளை புரிந்து கொள்ளும் தன்மை, கலப்படமற்ற தூய்மை ஆகிய அடிப்படை மனித குணங்களின் மீது ஒன்றி இருத்தல், எவ்வித பணப்பயனும் எதிர்பார்க்காமல் தன்னார்வ சேவை புரிதல் தங்கள் பணிகளில் இருந்து வருமானத்தை எதிர் நோக்காதவர்களாகவும், ஆனால் இச்சமூகத்தின் பலவீனமான பிரிவினர், வறியவர்கள் ஆகியோரை மேலுயர்த்துவதற்கான உறுதியும், உணரும் திறனும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.
3	**வயது**	18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
4	**மதிப்பூதியம்**	பணிபுரியும் நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு **ரூ.750/-** மதிப்பூதியமாக வழங்கப்படும்.
5	**விண்ணப்பிக்க கடைசி நாள்**	10.10.2025
6	**பணிகாலம்**	தேர்வு செய்யப்படும் நாளிலிருந்து ஒரு ஆண்டு

விருப்பம் உள்ளவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பபடிவத்தினை நிரப்பி தபாலிலோ அல்லது நேரிலோ கீழே கண்ட முகவரிக்கு **10.10.2025** தேதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ **மாலை 5.30** மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கப் பெறுமாறு அனுப்பக் கோரப்படுகிறது.

உயர்திரு. தலைவர் அவர்கள்,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
மாவட்ட நீதிமன்ற வளாகம்,
நாகர்கோவில் - 629 001.
கன்னியாகுமரி மாவட்டம்.

Sd/-

தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு
கன்னியாகுமரி (இ) நாகர்கோவில்.

கன்னியாகுமரி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு (இ) நாகர்கோவில்

சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் சேர்க்கை விண்ணப்பப்படிவம்

பாஸ்போர்ட் சைஸ் போட்டோ இங்கே ஒட்ட வேண்டும
Passport Size Photo to be affixed here

1	பெயர் (பெரிய எழுத்துக்களில்) / Name (In Capital Letter)		
2	பாலினம் / Sex	ஆண் / பெண் / திருநங்கை (Male/Female/Transgender)	
3	வயது/ Age		
4	தகப்பனார் அல்லது கணவர் பெயர் / Father's/Husband's Name		
5	கல்வித் தகுதிகள் / Educational Qualification		
6	தொழில் சார்ந்த கல்வித் தகுதிகள் / Technical Qualifations		
7	அலுவலக விலாசம் / Office Address		
8	வசிப்பிட விலாசம் / Residential Address		
9	தொழில் / Occupation		
10	தொலைபேசி எண் / Telephone Number		
11	கைபேசி எண் / Cell Number		
12	மின்னஞ்சல் முகவரி / Email ID		
13	எப்பகுதியில் சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டராக பணி செய்ய விரும்புகிறீர்கள் / Place in which willing to work as Para Legal Volunteers. ☐ மார்க் செய்யவும் / Tick in the Appropriate Column	நாகர்கோவில் / Nagercoil	
		பத்மனாபபுரம் / Padmanabhapuram	
		குழித்துறை / Kuzhithurai	
		இரணியல் / Eraniel	
		பூதப்பாண்டி / Boothapandi	
14	தாங்கள் ஏற்கெனவே சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டராக பணிபுரிந்திருந்தால் விவரம் மற்றும் செய்த பணிகள் குறித்து தெரிவிக்கவும் / Whether you have already worked as P.L.V.? If so, details or Service rendered to be stated.		
15	குற்றவழக்குகளில் ஏதேனில் நீவிர் சம்பந்தப்பட்டவராக இருந்தால் அதன் பற்றிய விவரம் / If you are involved in any of the criminal cases about it.		
16	மேலும் தாங்கள் தெரிவிக்கும் தகவல்கள் / Other Informations, if any.		

நாள்: **கையெழுத்து**
இடம்:

குறிப்பு: சட்டம் சார்ந்த தன்னார்வ தொண்டர்கள் பணி நிரந்தர பணி அல்ல. பணி நிரந்தரம் செய்ய உரிமை கோர இயலாது.